**எச்.எம்.ஓ.பி. எண்: 03/2025**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 13th day of March 2026

எ.ம.சா.1. அர்ச்சனா, க/பெ. மதிவாணன்,

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பிசிஏ படித்து முடித்துள்ளேன். நான் தற்போது வேலை பார்க்கவில்லை. நான் திருமணம் ஆகி ஆரம்பத்தில் நானும் என் கணவரும் சந்தோஷமாக தான் குடும்பம் நடத்தினோம். எனது கணவர் சிஆர்பிஎப்-ல் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார். அவரது வேலை அடிக்கடி பணிமாற்றம் ஏற்படக்கூடிய வேலை என்பதை தெரிந்து தான் அவரை திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் எனது கணவர் அவர் வேலை செய்யும் இடங்களுக்கு என்னை அழைத்து சென்றுள்ளார். அங்கு சென்று அவருடன் தங்கியுள்ளேன். எனது கணவர் என்னிடம் பாசமாக தான் இருந்தார். எனது கணவர் ஒரு முறை தான் என்னை வீட்டில் வைத்து பூட்டி விட்டு சென்றார். நான் எனது வீட்டிற்கு அலைபேசி மூலம் என் பெற்றோரிடம் பேசினேன். அது குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எனது கணவருக்கு குடிபழக்கம் உள்ளதாக தெரிவித்துள்ளேன். அவ்வாறு குடித்துவிட்டு அவர் கேவலமாக பேசி திட்டி அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறும் சில நாட்கள் நடந்துள்ளது. அதற்கும் நான் காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் குழந்தை பெற்றுக்கொள்வதற்காக போளூரில் உள்ள மணியம்மாள் மருத்துவமனை, குமரன் மருத்துவமனை மற்றும் சென்னையில் உள்ள அனிதா நர்சிங் ஹோம் ஆகிய மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளேன். என்னை எனது கணவர் தான் மருத்துவ சிகிச்சைக்கு அழைத்து சென்றார். மருத்துவமனைகளில் நானும் எனது கணவரும் மருத்துவ பரிசோதனைகள் செய்து கொண்டோம் என்றால் சரிதான். ஒரு இடத்தில் மட்டும் தான் அவ்வாறு இருவருக்கும் பரிசோதனை செய்யப்பட்டது. அந்த விவரத்தை நான் வழக்கில் சொல்ல மறந்துவிட்டேன். நான் எனது கணவருக்கு கொடுக்கப்பட்ட மருத்துவ பரிந்துரையை பார்த்துள்ளேன். ஆனால் அவர் அந்த மருந்துகளை உட்கொள்ளவில்லை. அந்த மருத்துவர் பரிந்துரை கொடுத்த மருத்துவர் பெயர் எனக்கு தெரியவில்லை. மத்தியபிரதேசத்தில் பார்த்ததால் பாஷை புரியவில்லை. சென்னையில் நான் சிகிச்சை எடுத்து கொண்ட மருத்துவர்கள் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. மதர்ஸ் மருத்துவமனையில் பணிபுரிந்த பத்மபிரியா என்ற மருத்துவர் என்னை பரிசோதனை செய்துவிட்டு அறிக்கை அடிப்படையில் எனக்கு பிறவிலேயே கர்ப்பப்படை மூடியுள்ளது என்றும் அதற்கு அறுவை கிசிச்சை செய்ய நாராயணா மருத்துவமனைக்கு பரிந்துரைத்தார் என்றால் சரிதான். அப்போது எனது கணவர் என்னை பராமரித்தாரா என்றால் ஆமாம் எனது வீட்டிலையும் என்னை கவனித்து கொண்டார்கள். நான்

இந்த வழக்கு திருவள்ளூரில் இருந்த போது தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்களை நான் முழுமையாக படித்து பார்க்கவில்லை. எதிர்வழக்குரை கடைசி நேரத்தில் தாக்கல் செய்ததால் வழக்கறிஞர்கள் என்னிடம் அவசரமாக கையெழுத்து வாங்கினார்கள். அதனால் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. உண்மையில் அந்த எதிர்வழக்குரை நான் சொல்லியுள்ள விவரங்களை வைத்து தான் வழக்கறிஞர் தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தற்போது எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்களை முற்றிலும் மாற்றி தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் சொல்லியுள்ளேன் என்றால் தற்போது சொல்லியுள்ள விவரங்கள் தான் உண்மையானது ஆகும். அதனால் மனுதாரருக்கு மன உளைச்சல் ஏற்பட்டுள்ளது என்றால் அவர் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனக்கும் மன உளைச்சல் ஏற்பட்டுள்ளது. நான் திருமணத்திற்கு பின்னர் வேலைக்கு செல்லவில்லை. வீட்டில் தான் இருந்தேன். நான் 02.03.2022 ம் தேதி எனது தங்கையின் நிச்சயத்திற்காக எனது பிறந்த வீட்டிற்கு சென்றேன். அதன் பின்னர் நான் திரும்பி கணவர் வீட்டிற்கு செல்லவில்லை. எனது அம்மா வீட்டிலேயே தான் இருந்து வருகிறேன். எனது தந்தை எதிர்பாராமல் இறந்துவிட்டதால் அந்த அதிர்ச்சியில் தகவலை எனது கணவருக்கு சொல்ல இயலவில்லை. அதனால் எனது சித்தப்பா எனது கணவருக்கு போன் மூலம் தகவல் சொல்லினார். எனது கணவர் எனது தந்தை இறப்பிற்கு வந்தார். மருமகன் என்ற முறையில் அனைத்து இறுதி சடங்குகளும் இறுதி மரியாதையும் செய்தார் என்றால் சரிதான். அதன் பின்னர் ஒரு நாள் என்னை எனது தாயாரையும் தனது வீட்டிற்கு எனது கணவர் துக்க இரவிற்கு அழைத்து சென்றார் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** – மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்

Sd/- S. Senthilbabu,

சார்பு நீதிபதி,
போளூர்.

சாட்சியின் கையொப்பம்